

அயலக தமிழர் சாதனை விருது 2025 நிகழ்ச்சியில் கலந்து கொள்ள லண்டன் சென்றிருக்கும் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் லண்டன் நாட்டில் உள்ள அண்ணல் டாக்டர் அம்பேத்கர் அவர்கள் படித்த London school of Economics பல்கலைக்கழகத்தை மற்றும் அவர் வாழ்ந்த இல்லத்தை நேரில் பார்வையிட்டு அண்ணல் அம்பேத்கர் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் ஐக்கிய இராஜ்ஜியம் (U.K.) நாட்டின் தி.மு.க. அயலக அணி அமைப்பாளர் செந்தில், கழக மாநில சிறுபான்மையினர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு உள்ளனர்.

### டாக்டர் அண்ணல் அம்பேத்கரின் கனவை செயலாக்கும் வகையில்

# தமிழ்நாடு முதல்வரின் திராவிட மாடல் அரசு செயல்பட்டு வருகிறது!

## லண்டனில் டாக்டர் அண்ணல் அம்பேத்கரின் நினைவு இல்லத்தை பார்வையிட்ட பின் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பெருமிதம்!

லண்டன், மே 24-

இங்கிலாந்து நாட்டின், கேம்டன் நகரில், டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்கள் 1921-22 இல் லண்டன் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸ்ல் படிக்கும் போது வாழ்ந்த இல்லத்தினை நேரில் சென்று பார்வையிட்டபின் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பின்வருமாறு அறிக்கை அளித்தார்.

அண்ணல் அம்பேத்கருக்கு சமமாக இந்தியாவில் யாரையும் சொல்ல முடியாது என்று சொன்னார் தந்தை பெரியார்.

இந்தியாவிலேயே முதன்முதலாக அம்பேத்கர் பெயரில் அரசு கல்லூரியை கொண்டு வந்தது தி.மு.க. சென்னை சட்ட பல்கலைக்கழகத்திற்கு அம்பேத்கர் பெயரை சூட்டியவர் கலைஞர்.

சென்னை பல்கலைக்கழகத்திற்கு அம்பேத்கர் பெயரை சூட்டியவர் கலைஞர். அம்பேத்கர் பிறந்த நாளை சமத்துவ நாளாக கொண்டாட உத்தரவிட்டது திமுக அரசு.

அண்ணல் அம்பேத்கரின் பெயரை மராத்வாடா பல்கலைக்கழகத்துக்கு வைக்க வேண்டும் என்று முயற்சிகள் மேற்கொண்ட போது மகாராஷ்டிர மாநில அரசு அதனை கிடப்பில் போட்டது. சிலர் எதிர்த்தார்கள். வன்முறையில் ஈடுபட்டார்கள். அண்ணல் அம்பேத்கர் பிறந்த மராட்டிய மாநிலத்திலேயே இந்த நிலைமை இருந்தது.

மராத்வாடா பல்கலைக்கழகத்துக்கு அம்பேத்கர் பெயரைச் சூட்ட வேண்டும் என்று தமிழ்நாட்டில் இருந்து தந்தி அனுப்ப வேண்டும் என்று கலைஞர் உத்தரவிட்டார். உடனடியாகப் பல்லாயிரக்கணக்கான தந்திகள் போனது. அப்பொழுது அந்த மாநிலத்தினுடைய ஆளுநர் அலெக்சாண்டர். அப்போது அந்த மாநிலத்தினுடைய முதலமைச்சர் சரத்பவார் கலைஞருக்குப் பதில் அனுப்பினார்கள். 'பெயரைச் சூட்டுவோம்' என்று அறிவித்தார்.

1989ஆம் ஆண்டு நூற்றாண்டு கண்ட சென்னை சட்டக் கல்லூரிக்கு 'டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரி' என்று பெயர் சூட்டியவர்தான் நம்முடைய தலைவர் கலைஞர். 1997ஆம் ஆண்டு சென்னையில் டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் உருவாக்கியவரும் தலைவர் கலைஞர் தான்.

மராட்டியத்தை விடத் தமிழ்நாட்டில் அம்பேத்கர் புகழ் பரவக் காரணமே திராவிட இயக்கம்தான். அம்பேத்கரின் 'சாதியை ஒழிக்கும் வழி' என்ற நூலை 1936ஆம் ஆண்டே தமிழில் மொழிபெயர்த்து புத்தகம் போட்ட இயக்கம், திராவிட இயக்கம்.

சுயமரியாதை இயக்க மாநாட்டுக்கு அம்பேத்கரை அழைத்து, அவர் வர இயலாத சூழ்நிலையில் மராட்டியத்தில் இருந்து எம். ஜெயகரை அனுப்பி வைத்தார் அம்பேத்கர். அந்தளவுக்கு அம்பேத்கரை விதைத்தது திராவிட இயக்கம்தான் என்பதை மறந்து விட முடியாது.

நீங்கள் தமிழ்நாட்டுக்கு வந்து எங்களுக்குத் தலைமை வகிக்க வேண்டும்" என்று சிலர் கோரிக்கை வைத்தபோது, "உங்களுக்குத்தான் பெரியார் ராமசாமி இருக்கிறாரே? அவரை வைத்து இயக்கம் நடத்துங்கள்" என்று சொன்னவர் அண்ணல் அம்பேத்கர்.

1969ஆம் ஆண்டு முதல்முதலில் முதலமைச்சரான தலைவர் கலைஞர் தான் ஆதிதிராவிடர் நலத்துறையையும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையையும் தனித்தனியே உருவாக்கினார்கள். அதற்கென்று அமைச்சர்களை நியமித்தார்கள்.

பட்டியலின மக்களுக்கு 18 விழுக்காடும் , பழங்குடியினருக்கு 1 விழுக்காடும், பிற்படுத்தப்பட்டோருக்கு 31 விழுக்காடும் வழங்கிய தலைவர்தான் நம்முடைய தலைவர் கலைஞர்.

அம்பேத்கர் கனவை செயலாக்கும் வகையில் திமுகவின் மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் மு.க. ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசு செயல்படுகிறது.

இறையாண்மை, சமதர்மம், மதசார்பின்மை, மக்களாட்சி நான்கும் இணைந்து பயணிக்கும் குடியரசாக இந்தியா இருக்க வேண்டும் என்பதே அம்பேத்கர் கனவு. அத்தகைய அம்பேத்கரின் எண்ணங்களை பிசகாமல் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அரசு நிறைவேற்றுகிறது

வடக்கில் உதித்த சமத்துவ சூரியன் அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாளான ஏப்ரல் 14ஆம் தேதி இனி சமத்துவ நாள் என்று கொண்டாடப்படும்" என முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கடந்த 2022ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டப்பேரவையில் விதி 110ன் கீழ் அறிவித்தார்கள்.

அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாள் அன்றும் அன்னாரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செய்து, "சமத்துவ நாள் உறுதிமொழி" ஏற்றுக் கொண்டு வரப்படு கிறது.

சாதி வேறுபாடுகளுக்கு எதிராகவும்,சாதிகளின் பெயரால் நடக்கும் சமூக அடக்குமுறைகளுக்கு எதிராகவும், தொடர்ந்து போராடி,ஒதுக்கப்பட்டவர்களுடைய உரிமைகளுக்காகவும், ஒடுக்கப்பட்டவர்களுடைய சமத்துவத்திற்காகவும்,வாழ் நாள் எல்லாம் குரல் கொடுத்து, எளிய மக்களின் உரிமைகளைப் பற்றி விழிப்புணர்வை ஊட்டிய,

நம் அரசியலமைப்புச் சட்டத்தை வகுத்துத் தந்த அண்ணல் அம்பேத்கர் அவர்களை பின்பற்றி, சாதி வேறுபாடுகள் ஏதுமில்லாத சமத்துவ சமுதாயத்தை அமைக்க,

நாம் அனைவரும் பாடுபடுவோம் என்றும், சகமனிதர்களைச் சாதியின் பெயரால் ஒருபோதும் அடையாளம் காணமால், சக மனிதர்களிடம் சமத்துவத்தை வாழ்நாள் முழுவதும் கடைபிடிக்க என்றும் உறுதி ஏற்போம், என அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தெரிவித்தார்.

### சிவகங்கை – மல்லாக்கோட்டை கல்குவாரி விபத்தில்

# உயிரிழந்த 6 பேரின் குடும்பங்களுக்கு ரூ.60 லட்சம் நிதி உதவி!

## முதல்வர் நிவாரண நிதி – நிறுவன நிதி – சொந்த நிதி – அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்கினார்!

சிவகங்கை, மே 24 -

சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி தாலுகா மல்லாக் கோட்டையில் தனியார் கல்குவாரி உள்ளது .இந்த கல்குவாரியில் கடந்த 20 ஆம் தேதி ஏற்பட்ட பாறை சரிவு மற்றும் மண் சரிவுகளினால் ஆறு பேர் படுகாயம் அடைந்தார்கள் .இதில் 5 பேர் இடிபாடுகளில் சிக்கி பலத்த காயத்துடன் உயிரிழந்தார்கள். இதில் ஒருவர் தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த மைக்கேல் என்பவர் மட்டும் பலத்த காயங்களுடன் மதுரையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை சேர்க்கப்பட்டிருந்தார் . அவரும் சிகிச்சை பலனின்றி நேற்று முன் தினம் மரணம் அடைந்தார்.இந்த விபத்தில் 6பேர் மரணம் அடைந்துள்ளார்கள்.

இறந்த 5தொழிலாளிகளான குழிசேவல்பட்டியைச் சேர்ந்த கணேசன், ஓடப்பட்டியை சேர்ந்த முருகானந்தம், இ. மலம் பட்டியைச் சேர்ந்த ஆறுமுகம், ஆண்டிச்சாமி, ஆகிய நான்கு பேரின் உடல்கள் மீட்கப்பட்டு சிவகங்கை அரசு மருத்துவமனை மருத்துவக்கல்லூரியில் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதில் ஒரிசா மாநிலத்தைச் சேர்ந்த ஹர்ஷித்தின் உடல் மீட்கப்பட முடியாமல் இடுபாடுகளில் கிடந்தது. ஹர்சித்தை மீட்ப தற்காக திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரத்திலிருந்து தேசிய மீட்புப் படையினர் இன்ஸ்பெக்டர் கலையரசன் தலைமையில் ஒரு நாள் போராடி அந்த உடலை மீட்டு சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பிரேதபரிசோத னைக்கு அனுப்பி வைத்தார்கள்.

இறந்துபோன ஹர்ஷித் உறவினர்களுக்கு தகவல் தந்ததன் பேரில் அவரது உறவினர்கள் நேற்று முன் தினம் சிவகங்கைக்கு வந்தார்கள் . கல்குவாரி விபத்து பற்றிய தகவல் முதல்வருக்கு தெரிவிக்கப்பட்டது. முதல்வர் மரணம் அடைந்த 5பேரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துடன் தலாருபாய் 4லட்சம் வீதம் ரூபாய் 20 லட்சம் முதல்வர் நிவாரண நிதியிலிருந்து நிதியுதவியும் காயம் அடைந்து மதுரையில் சிகிச்சை பெற்று வரும் மைக்கேலிற்கு ரூபாய் 1லட்சம் ஆக மொத்தம் ரூபாய் 21 லட்சம் நிதி வழங்க உத்தரவிட்டார்.

நிவாரணப்பணிகளை கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கல்குவாரிக்கு சென்று நிவாரண பணிகளை துரிதப் படுத்தினார். மரணம் அடைந்த நான்கு பேரின் உடல்களை உடனடியாக பிரேத பரிசோதனை செய்து உறவினர்களிடம் ஒப்படைப்பதற்கானபணிகளை மருத்துவக்கல்லூரி மருத்துவ மனைக்கு சென்று பணிகளை விரைவுபடுத்தி னார் . இதனால் இறந்து போன நான்கு பேர்களின் இறுதிச் சடங்கு கள் அன்றே நடைபெற்றது. இதில் அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் கலந்து கொண்டு அவர்களது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தும் அவர்களுக்கு தேவையான உதவிகளை தாமும்,முதல்வரிடம் கூறி செய்துதருவதாக வும், கல்குவாரி உரிமையாளரிடம் பேசி நிதிஉதவி பெற்று தருவதாக உறுதி கூறினார்.

இதில் முதல் நாள் இறந்து போன நான்கு குடும்பங்களுக்கு தலா ரூபாய் 4 லட்சம் முதல்வர் நிவாரணநிதி உதவித்தொகை. மொத்தம் ரூபாய் 16 லட்சம்,தனது சொந்த நிதியாக ஒன்றரை லட்சம் வீதம் மொத்தம் ரூபாய் 6லட்சம் இதுபோக கல்குவாரி உரிமையாளர் மூலம் ரூபாய் 5லட்சம் வீதம் ரூபாய் 20லட்சம் வீதம் நான்கு பேர்களின் குடும்பத்திற்கு தலா. ரூபாய் 10=50 லட்சம் வீதம் மொத்தம் ரூபாய் 42 லட்சத்தினை குழிசேவல்பட்டி கணேஷ், ஒடப்பட்டியைசேர்ந்த முருகானந்தமம்,இ.மலம் பட்டியைச்சேர்ந்த ஆறுமுகம், ஆண்டிச்சாமி ஆகியோரின் உறவினர்களிடம் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தலைமையில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர். பெரியகருப்பன் வழங்கினார் .

இதனைத் தொடர்ந்து ஒரிசா மாநிலத்தைச் சேர்ந்த பொக்லைன் ஓட்டுநர் ஹர்ஷித் உடன் சிவகங்கை அரசு மருத்துவமனையில் பிரேதப் பரிசோதனை முடிவடைந்து அவரது உறவினர்களிடம் நேற்று முன் தினம் ஒப்படைக்கப்பட்டது. ஹர்சித் உடலுக்கு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் மலர்மாலை வைத்து மரியாதை செலுத்தினார் ஒரிசாவிலிருந்து வந்திருந்த ஹர்ஷித் உறவினர்களுக்கு ஆறுதல் கூறி ரூபாய் 10=50 லட்சம் நிதி உதவி வழங்கினார் . ஹர்ஷித் உடலை குளி ரூட்டப்பட்ட ஆம்புலன்ஸ் முலம் ஒடிசாவிற்கு அனுப்பி வைத்தார்.

தொடர்ந்து மதுரை தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று மரணம் அடைந்த மைக்கேலின் உடல் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் பிரேத பரிசோதனை செய்து உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. மைக்கேல் உடலிற்கு மலர் மாலை வைத்து அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அஞ்சலி செலுத்தினார். மைக்கேல் உறவினரிடம் முதல்வர் அறிவித்த ரூபாய் 1லட்சத்திற்கான காசோலைஅவரது சொந்த நிதியாக ரூபாய் ஒன்றரை லட்சம் , கல்குவாரி உரிமையாளர் தந்த ரூபாய் 5லட்சம் ஆக மொத்தம் ரூபாய் 7=50 நிதியை வழங்கி ஆறுதல் கூறினார்.

மேலூரம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்த மைக்கேல் மரணம் குறித்து முதல்வருக்கு தகவல் தெரிவித்து நிவாரண உதவி பெற்று தருவதாக உறுதி கூறினார். இதுவரை இறந்து போன ஐந்து பேரின் குடும்பத்தினரிடம் முதல்வர் நிவாரண உதவி, கல்குவாரி உரிமையாளர் நிதி உதவி, அமைச்சர் பெரிய கருப்பன் சொந்த நிதி உதவி மொத்தம் ரூபாய், 60 லட்சம் நிவாரண உதவியாக வழங்கப்பட்டுள்ளது.

இதில் முதல்வர் சார்பில் ஐந்து நபர்களுக்கு 20 லட்சமும் காயம் அடைந்த மைக்கேலுக்கு ரூபாய் ஒரு லட்சம் அமைச்சரின் சார்பில் ஆறு நபர்களுக்கு ஒன்பது லட்சம் கல் குவாரி உரிமையாளர் சார்பில் 30 லட்சம் ஆக ரூபாய் 60லட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது .

விபத்தில் காயம் ஏற்பட்டு சிகிச்சை பலனின்றி மரணம் அடைந்த மைக்கேல் குடும்பத்தினருக்கு முதல்வர் நிவாரண நிதி உதவி பெறுவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அமைச்சருடன் கழக நிர்வாகிகள் உடன் சென்றிருந்தார்கள்.



பெருங்களத்தூர் வடக்கு பகுதி தி.மு.க. மற்றும் மாநகர இளைஞர் அணி சார்பில் தாம்பரம் ஸ்போர்ட்ஸ் அகாடமி சார்பில் நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்ற வீராங்கனைகளுக்கு ச.இராஜேஷ் ஏற்பாட்டில் மண்டல குழு தலைவர் டி.காமராஜ், தேசிய வாலிபால் வீராங்கனை அக்ஷயா ஆகியோர் கலந்து கொண்டு கோப்பை – பரிசுகளை வழங்கி சிறப்பித்தனர். இந்த நிகழ்ச்சியில் டி.ஆர்.கோபி, லிங்கேஸ்வரி பாபு, எல்.பெரியநாயகம்,எஸ்.ஜி.கருணாகரன், ஜா.ரவிக்குமார், ஆர்.செல்வகுமார், மங்களபுரம் பாபு,ஜி. ஸ்ரீதர்குமார் (எ)பாபு, கா.மு.சூரியா, விக்கி (எ) கே.எஸ்.யுவராஜ், இரா.தேவராஜ், எஸ்.சுரேஷ் கார்த்திக்ராஜ், தா.மணிகண்டன், அருண்குமார், குமரன், உதயகுமார், ராஜி, விஜய், வாட்டர் மோகன், தேவா, முரளி, கண்ணையா, வினோத்குமார், சரத்பாபு, சத்யா, ராஜ்குமார் மற்றும் பயிற்சியாளர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மயிலை நா. சம்பந்தன்
### மே 24 (1998)



சென்னை மாவட்டம், மயிலைப் பகுதிக் கழகச் செயலாளராக மூன்று முறையும் – மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் – தலைமைச் செயற்குழு உறுப்பினர் என பல பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர் – மண்டலக்குழுத் தலைவர் மற்றும் மயிலை இந்து சாசுவத நிதி நிறுவனத்தில் இயக்குநராக மூன்று முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

மிசா சட்டத்தின்கீழ் சிறைவாசம் – இந்தி எதிர்ப்பு – இலங்கைத் தமிழர் பாதுகாப்பு உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குட்டப்பாளையம் மிசா கே.என்.சாமிநாதன்
### மே 24 (1986)



கொங்கு சீமையில் பாரம்பரியமிக்க செல்வாக்குள்ள குடும்பத்தில் பிறந்தவர் எனினும், சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபாடு கொண்டு, திராவிடர் கழகத்தில் பணியாற்றி, கழகம் துவங்கியபோது தன்னையும் அதில் இணைத்துக் கொண்டு, கழகச் செயல் வீரர்களுடன் கொங்கு மண்டலத்தின் பட்டிதொட்டிகளுக்கெல்லாம் சென்று, பாமரனும் புரியும்படி நகைச்சுவையாக பேசி கழக கொள்கைகளை பரப்பியவர்.

1967ல் வெள்ளகோவில் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு, வெற்றி பெற்றார்.

பேரறிஞர் அண்ணா முதல்வராக இருந்தபோது, கால்நடை அபிவிருத்தி குழு உதவி தலைவராகவும் – தமிழ்நாடு தானிய சேமிப்பு கிடங்கு இயக்குநராகவும் – ஈரோடு மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநராகவும் – தாராபுரம் குளத்துப்பாளையம் கூட்டுறவு நூற்பு ஆலை தலைமை பொறுப்பு போன்ற பொறுப்பு வகித்து திறம்பட பணியாற்றியவர்.

நெருக்கடிகால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு கோவையில் சிறைவாசம் அனுபவித்தவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் "கொங்கு நாட்டில் தலைதாழச் சிங்கமாக, தன்மான முரசாக தமிழ் இனத்துச் சுடரொளியாக வாழ்ந்த குட்டைப்பாளையத்தார்" என தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**